**<u>தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

முன்னிலை : திருமதி.J.கிறிஸ்டல் பபிதா, எம்.எஸ்.சி., எம்.எல்.,
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 16 ஆம் நாள் வியாழக் கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 161/ 2018

C.N.R.No. TNTS02-000251-2018

அரசுக்காக :-
காவல் ஆய்வாளர்,
தென்காசி காவல் நிலையம்,
கு.எண் : 462/ 2017 . . . குற்றமுறையிடுபவர்

/ எதிராக /

பூபதி,
த.பெ. முப்பிடாதி
கல்யாணிபுரம் தெரு,
சுந்தரபாண்டியபுரம்.

. . . எதிரி

இந்த வழக்கானது 06.07.2018 அன்று தென்காசி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.161/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் தென்காசி, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, 10.03.2026 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு 13.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.R. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.M. திருமலை அவர்கள் ஆஜராகியும், வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சியங்கள் மற்றும்

சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்து இன்று (16.07.2026) இந்நீதிமன்றம் வழங்கும்..

## தீர்ப்புரை

1. **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–**

கடந்த 20.09.2017 ம் தேதி எதிரி ஓட்டி வரும் TN 76 AA 9847 என்ற பதிவு எண் கொண்ட ஆட்டோவில் புகார்தாரர் சௌந்திரசெல்விக்கு வலது புறம் இரண்டாவது சாட்சி சராபினும் இடது புறம் மூன்றாவது சாட்சி ராஜாத்தியும் அமர்ந்து கொண்டு சுந்தரபாண்டியபுரத்திலிருந்து தென்காசி செல்லும் வழியில் உள்ள மேலப்பாட்டாகுறிச்சியில் நெல்லை என்பவர் அதே ஆட்டோவில் ஏறி இடது ஓரமாக அமர்ந்து கொண்டு கீழப்புலியூர் ஆழிப்பாறைக்கு கிழக்கே சுமார் 200 அடி துூரத்தில் கிழக்கேயிருந்து மேற்காக தென்காசிக்கு செல்லும் மெயின்ரோட்டில் மாலை 4.30 மணிக்கு மேற்படி எதிரி ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவன குறைவாகவும் ஓட்டி கொண்டு சென்ற போது திடீரென ஆட்டோ நிலை தடுமாறி ரோட்டிற்கு தென்புறமுள்ள சரிவான பகுதியில் இழுத்து சென்று வயக்காட்டில் இடது புறமாக கவிழ்ந்து விட்டதாகவும், அதில் புகார்தாரருக்கு நெற்றியின் இடது பக்கம் சாதாரணகாயத்தையும், 2வது சாட்சிக்கு வலது கால் முட்டியிலும் வலது கை மணிக்கட்டிலும், 3வது சாட்சிக்கு இடது முன்னங்கையில் கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும் சம்பவ நிகழ்வின் போது நெல்லை என்பவருக்கு தலைபகுதியில் பெருமூளை சிதைவு ஏற்பட்டு பலத்த காயத்தினால் இறப்பு ஏற்பட்டதாகவும், எனவே எதிரி இதச பிரிவுகள் 279, 337(2 எண்ணம்), 338, 304(A) –ன் படி குற்றங்கள் புரிந்துள்ளதாக தென்காசி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. அழைப்பாணையின்பேரில் ஆஜரான எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.விமு.ச.207 பிரிவின் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு பற்றி எதிரியிடம் வினவியபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்தார். எதிரி குற்றச்சாட்டை மறுத்த காரணத்தால் அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

4. இந்த வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசுத்தரப்பில் அ.சா–1 முதல் அசா–4 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அரசுத்தரப்பு அசாஆ–1 முதல் அசாஆ–13 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிதரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின்படி வினவியபோது எதிரி 'பொய் சாட்சி' என்று மறுத்துள்ளார். எதிரி தரப்பில், சாட்சிகள் 'இல்லை' என்று கூறியுள்ளார்.

6. <u>இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்,</u>

அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 279, 337 (2 எண்ணிக்கை), 338 மற்றும் 304(A)–ன் படியான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதாகும்.

7. **<u>தீர்வு:–</u>**

இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில், எதிரி ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவன குறைவாகவும் ஓட்டி கொண்டு சென்ற போது திடீரென ஆட்டோ நிலை தடுமாறி ரோட்டிற்கு தென்புறமுள்ள சரிவான பகுதியில் இழுத்து சென்று வயக்காட்டில் இடது புறமாக கவிழ்ந்து விட்டதாகவும், அதில் புகார்தாரருக்கு நெற்றியின் இடது பக்கம் சாதாரணகாயத்தை ஏற்படுத்தியதாகவும், 2வது சாட்சிக்கு வலது கால் முட்டியிலும் வலது கை

மணிக்கட்டிலும் சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாகவும் 3வது சாட்சிக்கு இடது முன்னங்கையில் கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும் சம்பவ நிகழ்வின் போது நெல்லை என்பவருக்கு தலைப்பகுதியில் பெருமூளை சிதைவு ஏற்பட்டு பலத்த காயத்தினால் இறப்பு ஏற்படுத்தியதாகவும், கூறப்பட்டு எதிரி மீது இதச பிரிவுகள் 279, 337 (2 எண்ணிக்கை), 338 மற்றும் 304(A) –ன் படியான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

8. இவ்வழக்கின் புகார்தாரர் அசா–1 சவுந்தரசெல்வி என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் "சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 05.00 மணியளவில் நானும், சரபீன் டீச்சர், இராசாத்தி டீச்சர், நெல்லை ஆகியோர்களும் ஆட்டோவில் திருச்சிற்றம்பலம் ஊரிலிருந்து தென்காசி நோக்கி வந்து கொண்டிருந்தோம். எதிரி தான் ஆட்டோவை ஓட்டி வந்தரா? என்று எனக்கு தற்போது ஞாபகமில்லை. நான் தூங்கிக்கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு சத்தம் கேட்டது. நான் கண்விழித்து பார்த்தபோது ஆட்டோ பள்ளத்தில் விழுந்து கிடந்தது. எனக்கு தலையில் கம்பி இடித்து சின்ன காயம் ஏற்பட்டது. நெல்லை மீது ஆட்டோ கவிழ்ந்து பலத்த காயம் ஏற்பட்டது. என்னுடன் இருந்த மற்ற நபர்களுக்கும் காயங்கள் ஏற்பட்டது. பின்னர் அங்குள்ள நபர்கள் ஆம்புலன்ஸ் வரவழைத்து முதலில் தங்கபாண்டி மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டு பின்னர் தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக வந்தோம். நான் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று விட்டு வந்து விட்டேன். நெல்லை தென்காசி அரசு மருத்துவமனைக்கு வரும்போதே இறந்து விட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்தை போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் வெற்று பேப்பரில் போட்டு கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது" என்று கூறியுள்ளார். அசா–1 அரசுத்தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை.

9. சம்வத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அசா–2 சரபீன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் "சுமார் 7, 8 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நானும் நெல்லை, இராசாத்தி, சவுந்தரசெல்வி ஆகியோர்கள் ஒரு ஆட்டோவில் திருச்சிற்றம்பலம் ஊரிலிருந்து தென்காசி நோக்கி வந்து கொண்டிருந்தோம். எதிரி தான் ஆட்டோவை ஓட்டி வந்தரா? என்று எனக்கு தற்போது ஞாபகமில்லை. கீழப்புலியூர் கோணத்தில் வரும்போது நான் தூங்கிக்கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு சத்தம் கேட்டது. நான் கண்விழித்து பார்த்தபோது ஆட்டோ பள்ளத்தில் விழுந்து கிடந்தது. எனக்கு தலையில் கம்பி இடித்து சின்ன காயம் ஏற்பட்டது. நெல்லை மீது ஆட்டோ கவிழ்ந்து பலத்த காயம் ஏற்பட்டது. என்னுடன் இருந்த மற்ற நபர்களுக்கும் காயங்கள் ஏற்பட்டது. பின்னர் அங்குள்ள நபர்கள் ஆம்புலன்ஸ் வரவழைத்து தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக வந்தோம். நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டேன். நெல்லை தென்காசி அரசு மருத்துவமனைக்கு வரும்போதே இறந்துவிட்டார்" என்று கூறியுள்ளார். அசா–3 சங்கர்குமாரசாமி என்பவர் "7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் பள்ளிக்கூடத்திலிருந்து பைக்கில் ஏற்கனவே தென்காசி வந்துவிட்டேன். எனக்கு பின்னால் வந்த என்னுடன் பணிபுரிந்த ஆசிரியர் நெல்லை என்பவருக்கு ஆட்டோவில் விபத்து ஏற்பட்டதாக நான் கேள்விப்பட்டேன். இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது" என்று கூறியுள்ளார். அசா–2, அசா–3 ஆகியோர்கள்அரசுத்தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை.

10. இவ்வழக்கில் புகார்தாரரான அசா–1 மற்றும் முக்கிய சாட்சிகளான அசா–2, அசா–3 ஆகியோர்கள் எதிரியின் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்பட்டதாக அரசுத்தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்காத நிலையில், இதர சாட்சிகளின் சாட்சியங்களின் அடிப்படையில் மட்டும் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்ய முடியாது. எனவே சந்தேகத்தின் பலனை

எதிரிக்கு வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11. முடிவாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 279, 337 (2 எண்ணிக்கை), 338 மற்றும் 304(A) –ன் படியான குற்றச்சாட்டுகள், அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி குற்றவாளி அல்ல என்றும் முடிவு செய்து எதிரியை இதச பிரிவுகள் 279, 337 (2 எண்ணிக்கை), 338 மற்றும் 304(A) –ன் படியான குற்றங்களிலிருந்து, குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 255(i)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.

12. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் தாக்கல் இல்லை.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 16 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.17 16:55:39 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u> : –

| அரசுத்தரப்பு சாட்சி எண் | சாட்சியின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1 | திருமதி. சவுந்தரசெல்வி | புகார்தாரர் |
| 2 | திரு. சரபீன் | கண்ணுற்ற சாட்சி |
| 3 | திரு. சங்கர் குமாரசாமி | கண்ணுற்ற சாட்சி |
| 4 | திரு. பாலமுருகன் (காவல் ஆய்வாளர்) | புலன் விசாரணை அதிகாரி |

அரசு தரப்பு சான்றாவணங்கள் :–

| அரசுத்தரப்பு சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1. | புகார் வாக்குமூலத்தில் அசா–1 ன் கையெழுத்து | அ.சா.1 |
| 2 | புகார் வாக்குமூலம் | அ.சா.4 |
| 3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| 4 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| 5 | வரைபடம் | அ.சா.4 |
| 6 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.4 |
| 7 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.4 |
| 8 | பிரேத பரிசோதனை சான்று | அ.சா.4 |
| 9 | சிகிச்சை விவர சான்று | அ.சா.4 |
| 10 | விபத்து பதிவேட்டின் சான்று (ராஜாத்தி) | அ.சா.4 |
| 11 | விபத்து பதிவேட்டின் சான்று (சரபின்) | அ.சா.4 |
| 12 | விபத்து பதிவேட்டின் சான்று (நெல்லை) | அ.சா.4 |
| 13 | விபத்து பதிவேட்டின் சான்று (சௌந்திரசெல்வி) | அ.சா.4 |

அரசு தரப்பு சான்று பொருட்கள்:– இல்லை

எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : – இல்லை

எதிரி தரப்பு சான்று பொருள்கள்: – இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.17 16:55:44 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

பின் குறிப்பு:–

- ✓ எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்தார்.
- ✓ சாட்சிகள் மூன்று நாட்களுக்கு மேல்விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
- ✓ காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

,